4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)*

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) எதுவும் எடுக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அறிவிப்புக்*

கொடுத்தீர்கள். ஆய்விலே இருக்கிறது. நாளைக்கு எடுக்கிறேன் என்று சொன்னேன் இல்லையா? ஏன் அவசரப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், திருமதி யசோதா என்ன? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. ஜெயக்குமார், சும்மா உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். பதிலை என்னுடைய அறையில் வந்து கேட்டுக்கொள்ளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், என்னுடைய அறையில் வந்து கேளுங்கள் என்று நான்தான் சொல்லிவிட்டேன் அல்லவா? எல்லாமே ஆய்வில் இருக்கின்றன; நாளைக்கு எடுக்கப்படும் என்று சொல்லிய பிறகு, திரும்பவும் அதை இதைச் சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? பதில் அதுதான். உட்காருங்கள். நீங்கள் சொல்லுங்கள், திருமதி யசோதா.

முற்பகல் 10–40

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த வாரம் தங்களிடத்திலே ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே ஒரு... (குறுக்கீடுகள்) ஏற்கெனவே நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கடந்த வாரத்திலே கொடுத்தேன். நீங்களும் அதற்கு நடவடிக்கை எடுப்பதற்காகக் கையெழுத்துகூட போட்டுக் கொடுத்தீர்கள். அது ஒரு சமுதாயப் பிரச்சினை, ஆதி திராவிடர் மக்களுடைய பிரச்சினை. அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை உடனடியாக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அம்மா, நீங்கள் கொடுத்தது, சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறீர்கள். அதைப் பதிவு செய்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: ஏன் பதிவு செய்யமாட்டேன் என்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள். (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள்.

2006 ஆகஸ்ட் 23]

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே தரப்படுகிற ஒத்திவைப்புத் தீர்மானமாக இருந்தாலும், கவன ஈர்ப்புத் தீர்மானமாக இருந்தாலும். அதை எடுத்துக்கொள்ள வேண்டிய அளவுக்கு அவைத் தலைவர் அனுமதித்தாலும்கூட, ஒரு கட்சியிலே ஒருவர் ஒரு தீர்மானத்தைக் கொடுத்து அதைப்பற்றிப் பேசிவிட்டால், மறுபடியும் அந்தக் கட்சியிலே உள்ளவர்கள், வேறு தீர்மானத்திற்கு அன்றைக்கே வலியுறுத்துவது வழக்கமில்லை. ஒரு தீர்மானம்தான், ஒரு கட்சியின் சார்பாக ஒரு நாளிலே எடுக்கப்பட முடியும். வேறு கட்சியாக இருந்தால், அவர்கள் குறையிருக்குமானால் தெரிவிக்கலாம். ஆனால், ஒரு தீர்மானம் எடுத்ததற்குப் பின்னர், மேலும், மேலும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள், அவரவரும் கையிலே ஒரு தீர்மானத்தை வைத்துக்கொண்டு, அதை எடுக்க வேண்டுமென்று கேட்பது, அவையினுடைய மரபல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், அவை முன்னவர் பதில் சொல்லிவிட்டார்கள், அதற்குப் பிறகு என்ன இருக்கிறது?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: ஒரு தீர்மானத்திற்கு ஒரு கட்சிக்கு என்று அனுமதிக்கிறீர்கள்; அதற்கு நான் சொல்ல வரவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்தவுடனேயே, நாங்கள் முதலிலே எதிர்ப்பதற்காக எழுந்தோம். ஆனால், அந்த வாய்ப்பை நீங்கள் அளிக்காமலேயே அடுத்த நிமிடமாக நீங்கள் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். அதுதான் எங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அந்த வாய்ப்பை அளிக்க வேண்டும் எங்களுக்கு. அதுதான் கேட்டுக்கொள்கிறோம். அறிமுக நிலையிலேயே அதை எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய எதிர்ப்பு, பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி, எதிர்ப்பைச் சொல்லிவிடுங்கள். சொல்லுங்கள்.